| Page No. | |
|---|---|
| **சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்** | |
| **நாள்** | 04.01.2023 |
| MCOP | 33/2019 |
| ம.சா. 2 | நெப்போலியன், உதவி ஆய்வாளர், |

2022 ம் ஆண்டு ஜனவரி மாதம் 03-ம் நாள் என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டின் 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.ஸ்ரீவித்யா., B.Com. M.A.,B.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - நெப்போலியன் | ஜாதி | - |
| தந்தை பெயர்; | - | சமயம் | - |
| கிராமம் | - | தொழில் | - |
| தாலூக்கா | - | வயது | - |

முதல் விசாரணை -

நான் கருர் மாவட்டம் வேலாயுதம் பாளையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகின்றேன். இந்த வழக்கில் சாட்சிமயளிக்க அழைப்பாணையின் பேரில் ஆஜராகின்றேன். இந்த வழக்கு மோட்டார் வாகன ஆய்வறிக்கையை இந்த நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். இந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கின்றேன். இந்த ஆவணம் ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்தில் காயம் அடைந்த மனுதாரரின் மருத்துவமனை காயச் சான்றிதழை தாக்கல் செய்கின்றேன். அது ம.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த விபத்தின் பதிவேட்டு நகலை தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர் மீது பதிவு செய்யப்பட்ட விபத்து வழக்கில் எந்த தேதியில் எந்த நீதிமன்றத்தில் தீர்ப்பு பகரப்பட்டது என்று

கேட்டால் 27.02.2017 தேதியன்று கரூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அது STC 30/2017 என்ற வழக்கில் விசாரிக்கப்பட்டு இறுதியாக ரூ.1,750/- அபராதம் விதிக்கப்பட்டு தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விவரங்களை எங்களது காவல்நிலைய கோப்புகள் மற்றும் பதிவேடுகளின் அடிப்படையில் சாட்சிமயளிக்கின்றேன்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.